# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப் பரீட்சை - 2023

| தரம் : 08 | பாடம் : சைவநெறி I, II | நேரம் : 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் :..........................................................................................................

### பகுதி I

❖ **பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

**1)** முதல் வணக்கத்திற்குரிய கடவுள்
1. சிவன் 2. முருகன் 3. விநாயகர் 4. வைரவர்

**2)** கடவுளின் உண்மைத் தன்மை பற்றிக் கூறும் உபநிடதம்
1. சாந்தோக்கிய உபநிடதம் 2. சுடஉபநிடதம்
3. முண்டக உபநிடதம் 4. கேன உபநிடதம்

**3)** பிரபஞ்ச இயக்கத்தை விளக்குவது
1. பலிபீடம் 2. கொடிமரம் 3. சூக்குமலிங்கம் 4. கோபுரம்

**4)** “கோயில்” என சிறப்பாக அழைக்கப்படும் தலம்.
1. திருமருகல் 2. சிதம்பரம் 3. திருக்கழுமலம் 4. திருமறைக்காடு

**5)** ஆண்கள் செய்யும் நமஸ்காரம்
1. திரியாங்கம் 2. பஞ்சாங்கம் 3. ஷடாங்கம் 4. அட்டாங்கம்

**6)** “கற்றாங்கு எரியோம்பி…..” என்ற தேவாரப்பாடல் அமைந்த பண்.
1. கொல்லி 2. குறிஞ்சி 3. இத்தளம் 4. நவரோஜ்

**7)** “உழவாரப் படையாழி” எனச் சிறப்பிக்கப்படுபவர்
1. அப்பர் 2. சுந்தரர் 3. சம்பந்தர் 4. கண்ணப்பர்

**8)** மனம், வாக்கு, காயம் என்பன
1. அந்தக்கரணங்கள் 2. முச்சுடர்கள் 3. முத்தொழில்கள் 4. திரிகரணங்கள்

**9)** ஈதல் அறம் எனக் கூறியவர்
1. காரைக்காலம்மையார் 2. ஔவையார் 3. சம்பந்தர் 4. தருமசேனர்

**10)** பிரதிபலனை எதிர்பார்த்து செய்யப்படும் கிரியை
1. நைமித்திய கிரியை 2. நித்திய கிரியை
3. நிஷ்காமிய கிரியை 4. காமிய கிரியை

**11)** பண்ணிரன்டு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் நைமித்திய கிரியை
1. மகாமகம் 2. மாசிமகம் 3. கந்தசஷ்டி 4. திருவாதிரை

**12)** ஆலய அமைப்பில் பாதங்கள் குறித்து நிற்பது
1. கருவறை 2. மகாமண்டபம் 3. நிருத்த மண்டபம் 4. இராஜகோபுரம்


kalvi.lk

13) “மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்….” ஏன்று கூறும் நூல்

1. பெரியபுராணம் 2. வேதம் 3. கந்தபுராணம் 4. ஆகமம்

14) உத்தாலகரின் மகன் யார்?

1. மார்க்கண்டேயர் 2. ஊபமன்யு 3. நசிகேதன் 4. சுவேதகேது

15) ஆன்மா என்று அழைக்கப்படுவது

1. பசு 2. பாசம் 3. பதி 4. பந்தம்

16) கொடையில் சிறந்த வள்ளலாக மகாபாரதத்தில் குறிப்பிடப்படுபவர்

1. பாரி 2. அர்ச்சுனன் 3. கர்ணன் 4. தருமர்

17) சிறுத்தொண்டர் நாயனார் வாழ்ந்த பதி

1. திருமருகல் 2. திருவீழிமிழலை 3. திருச்செங்காட்டங்குடி 4. திருமறைக்காடு

18) ஆலயங்களில் இறுதியாக வழிபடும் மூர்த்தி

1. சண்டேசுரர் 2. வைரவர் 3. ஐயனார் 4. வீரபத்திரர்

19) தூலலிங்கம் எனப்படுவது

1. சிவலிங்கம் 2. சூக்குமலிங்கம் 3. கலசம் 4. கோபுரம்

20) கிரியைகள் பற்றிய விளக்கங்களைக் கூறும் நூல்.

1. புராணங்கள் 2. வேதம் 3. ஆகமம் 4. திருமுறைகள்

Education கல்வி அධ්‍යාපන

## பகுதி II

❖ **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக**

**1)** பின்வரும் பாடல்களில் இரண்டினை வரிக்கிரமமாக, பிழை இன்றி எழுதி, பாடியவர், தலம், என்பவற்றைக் குறிப்பிடுக.

1. “மண்ணில் நல்ல வண்மை….”
2. “பண்ணின் நேர்மொழியால்…..”
3. “பெருகலாம் தவம்…”
4. “கற்றாங்கு எரியோம்பி…”

*(6 × 2 = 12 புள்ளிகள்)*

**2)** “ கடவுளை நமபினோர் கைவிடப்படார்”

1. கடவுள் என்ற சொல்லின் பொருள் யாது?
2. கடவுளின் இயல்புகள் நான்கு தருக?
3. ஆன்மாக்களுக்காக இறைவன் புரியும் பஞ்சகிருத்தியங்கள் எவை?

*(4 × 3 = 12 புள்ளிகள்)*


kalvi.lk

**3)** ‘‘கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்’’

1. ஆலயம் என்பதன் பொருள் யாது?
2. விநாயகரை எவ்வாறு வணங்குதல் வேண்டும்?
3. ஆலயத்தில் செய்யத் தகாத செயல்கள் நான்கு தருக.

*(4 × 3 = 12 புள்ளிகள்)*

**4)** ‘‘வாழ்வை மேம்படுத்த உதவுபவை விழுமியங்களே’’

1. விழுமியங்கள் என்றால் என்ன?
2. விழுமியப் பண்புகள் நான்கு தருக?
3. கொடையில் சிறந்து விளங்கிய சான்றோர் நால்வரைக் குறிப்பிடுக.

*(4 × 3 = 12 புள்ளிகள்)*

**5)** ‘‘மருகலான் அடி வாழத்தி வணங்குவோம்’’

1. திருமருகலில் வீற்றிருக்கும் இறைவன் இறைவி பெயர் யாது?
2. சம்பந்தரும் அப்பரும் சேர்ந்து நிகழ்த்திய அற்புதங்கள் இரண்டு தருக?
3. திருமருகற் பெருமானை வணங்கினால் ஏற்படும் நன்மைகள் நான்கு தருக?

*(4 × 3 = 12 புள்ளிகள்)*

**6)** பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1. மனக் கட்டுப்பாடு
2. ஆலயக் கிரியைகள்
3. திருஞானசம்பந்தர்
4. கடவுள்

Education கல்வி අධ්‍යාපන

*(6 × 2 = 12 புள்ளிகள்)*


kalvi.lk

# GRADE 6-11

# STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்தொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page